பக்கங்கள் 16+4

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 22 வியாழக்கிழமை 04.04.2024 அதிர்வு 248

## மொட்டுக் கட்சி எம்.பி. நந்தசேன காலமானார்



ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

04▶

## சந்திரிகாவின் மனுவின் மீது உத்தரவு

# சு.க. தலைவராக மைத்திரி செயற்பட நீதிமன்றம் தடை!



## 14 நாள்களுக்குக் கட்டாணை



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் நீடிப்பதற்குக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலக் கட்டாணை பிறப்பித்துள்ளது.

இன்று (ஏப்ரல் 04) முதல் ஏப்ரல் 18 ஆம் திகதி

04▶





# நிதி மோசடி வழக்கில் நடிகை தமிதா கைது!

## அவரின் கணவரும் சி.ஐ.டியிடம் சிக்கினார்



நடிகை தமிதா அபேரத்ன மற்றும் அவரது கணவர் ஆகியோர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இன்று மதியம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொரியாவில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி 30 இலட்சம் ரூபா நிதி மோசடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டு இவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில தமிதா அபேரத்னவும் அவரது கணவரும் இன்று பிற்பகல் கோட்டை நீதவான் நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்தனர்.

அதன்பின்னரே அவர்கள் சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவருக்கும் வெளிநாடு செல்வதற்கு நேற்று தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம்:

# கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களும் நீதி கோரிய போராட்டத்தில் பங்கேற்பு

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அதிகாரங்கள் அத்துமீறிப் பறிக்கப்படுவதற்கும் அநீதிகள் இழைக்கப்படுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் நீதி கோரிய போராட்டம் 11 ஆவது நாளாக இன்று இடம்பெற்று வருகின்றது.

இங்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் நற்பிட்டிமுனை அம்பலத்தடி பிள்ளையார் ஆலய முன்றலில் இருந்து பொதுமக்களுடன் இணைந்து நடைபவனியாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் முன்னால் உள்ள போராட்ட இடத்தை வந்தடைந்தனர்.

இதன்போது அமைச்சரவை தீர்மானத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள், கல்முனை உப பிரதேச அலுவலகமாகக் கருதி மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத தீர்மானங்கள் அனைத்தையும் இரத்துச் செய்யுங்கள், காணி நிதி அதிகாரங்களை வழங்குங்கள், கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் சுயாதீன தொழிற்பாட்டை உறுதிப்படுத்துங்கள் எனப் பல்வேறு கோஷங்களை முன்வைத்துப் போராடி வருகின்றனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், செல்வராசா கஜேந்திரன் உட்பட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டிருக்கின்றனர்.

இது தவிர கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம மக்கள் கொளுத்தும் வெயிலிலும் நடைபவனியாக வந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருவதுடன் பொது அமைப்புக்கள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு நீதி கோரிய போராட்டத்துக்கு ஆதரவை வழங்கி வருகின்றனர்.


















# வீரகத்தி பிள்ளையார் ஆலயக் காணியில் சட்டவிரோதமான முறையில் புத்தர் சிலை

## திருகோணமலையில் தொடரும் பேரினவாத அத்துமீறல்

(ந.லோகதயாளன்)

திருகோணமலை, மடத்தடி வீர கத்தி பிள்ளையார் ஆலயக் காணி யில் சட்டவிரோதமான முறையில் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி பாரிய புத்தர் சிலை வைப்பதற்கான நடவ டிக்கை முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

திருகோணமலை, மடத்தடி பகுதி யில், பிரதான வீதிக்கு அருகாமை யில் வீரகத்தி பிள்ளையார் ஆலயத் திற்கு சொந்தமான காணியில் கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் பாரிய புத்தர் சிலை வைப்பதற்கான கட்டு மானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறித்த கட்டுமானப் பணிகளுக்கு நகர சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை உட்பட எவ்வித அரச திணைக்களங் களினுடைய அனுமதியும் பெறப் படாமல் சட்டவிரோதமான முறை யிலேயே இந்தக் கட்டுமானப்பணிகள் இடம்பெற்று வருகின்றன

இது தொடர்பாக நகர சபையின் செயலாளர் கடந்த மாதம் 23 ஆம் திகதி சம்பவ இடத்திற்கு விஜயம் மேற்கொண்டு கட்டுமானங்களை பார்வையிட்டிருந்தார். எனினும் கட்டு மானம் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது.

வெசாக் பூரணை தினத்தை முன் னிட்டு பாரிய புத்தர் சிலை வைக்கப் படவுள்ளது எனவும், ஒருகாலத்தில் அப்பகுதியில் விகாரை அமைக்கப் படலாம் எனவும் தமிழ் மக்கள் அஞ்சு கின்றனர்.

அத்துடன் இந்தப் பகுதியில் குடியிருக்கும் மக்கள் தங்கள் காணிக்குரிய ஆவணங்களை வழங்கக் கோரி கடந்த மாதம் 14 ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தையும் மேற்கொண்டி ருந்தார்கள்.

மடத்தடி பகுதியில் 2019 ஆம் ஆண்டு சட்ட விரோதமான முறை யில் தமிழ் மக்களுடைய எதிர்ப்பையும் மீறி ஓர் சிறிய புத்தர் சிலை வைக் கப்பட்டது. இது தொடர்பாக பொலிஸ் நிலையம் உட்பட அரச நிர்வாக மட்டங்களிலும் ஆலய நிர்வாகத்தி னரால் முறைப்பாடு செய்யப்பட்டது. இதன்போது அது அகற்றப்படும் எனக் கூறப்பட்டது எனவும், எனினும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படாது அந்த இடத்திலேயே பாரிய புத்தர் சிலை வைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

இன நல்லிணக்கம் தொடர்பாக அரசால் பல்வேறு திட்டங்கள் முன் னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மறு புறம் தமிழர் பகுதிகளில் பௌத்த ஆக்கிரமிப்புகளை மேற்கொண்டு இனங்களுக்கு இடையேயான நல் லுறவைச் சீர்குலைக்கும் இவ்வாறான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக மக்கள் கவலை வெளி யிடுகின்றனர்.

மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலயமானது கி.பி 1650 ஆம் ஆண்ட ளவில் பெரியராசகோன் முதலியார் என்பவரால் திருகோணமலை – மடத் தடி பகுதியில் அவருக்கு சொந்தமான நிலத்தில் கட்டப்பட்டது. அந்தப் பகுதி யில் 1958 ஆம் ஆண்டு கலப்பகுதி யில் இந்தப் பகுதியை சிங்கள மக்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கினார்கள். தற்போது 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கோயிலுக்குச் சொந்த மான இரண்டு ஏக்கருக்கும் அதிகமான பகுதியை ஆக்கிரமித்துள்ளன என்று தெரியவருகின்றது.







# வவுனியாவில் பல இலட்சம் ரூபா பணத்துடன் பெருமளவு கஞ்சா மீட்பு; மூவர் சிக்கினார்கள்!





(கே.வசந்தன்)

வவுனியா விசேட குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் பெருமளவு பணம் மற்றும் கஞ்சா போதைப்பொருளுடன் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று மேற்படி நபர்கள் கார் ஒன்றில் போதைப்பொருளைக் கடத்திச் செல்ல முற்பட்டுள்ளனர். இந்நிலையில் அதனை வழிமறித்த பொலிஸார் சோதனையில் ஈடுபட்டனர்.

இதன்போது அந்தக் காரினுள் 9 கிலோகிராம் கஞ்சா மற்றும் 19 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

வவுனியா, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 34, 27, 25 வயதுடைய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

### யூனியன் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் மீதான விசாரணை:

# தெல்லிப்பளை பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு மனித உரிமை ஆணைக்குழு அழைப்பாணை

(எஸ்.நிதர்ஷன்)

தெல்லிப்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை நாளை பிற்பகல் 2.30 மணிக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் ஆஜராகுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி தொடர்பில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களைத் தெல்லிப்பளை பொலிஸ் நிலையம் அழைத்து விசாரணை மேற்கொண்டமை தொடர்பில் விளக்கமளிக்கவே இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் ஊடகங்களிடம் இன்று தெரிவித்தார்.

# கொங்கிரீட் குழாய் சரிந்து விழுந்து பாடசாலை மாணவன் பரிதாபப் பலி

### மஸ்கெலியாவில் சோகம்

மஸ்கெலியா கார்ட்மோர் தமிழ் வித்தியாலயத்தில் கொங்கிரீட் குழாய் ஒன்று சரிந்து விழுந்ததில் மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கார்ட்மோர் தோட்டத்தில் மலசலகூடத்துக்கான குழியை வெட்டுவதற்குப் பயன்படும் கொங்கிரீட் குழாய்களை பாடசாலை வளாகத்தில் இறக்கி வைத்துள்ளனர்.

இதன்போது சில மாணவர்கள் அந்தக் கொங்கிரீட் குழாய்கள் மீது ஏறி விளையாடியபோது குழாய் ஒன்று மாணவன் ஒருவர் மீது சரிந்து விழுந்ததில் மேற்படி மாணவர் படுகாயமடைந்துள்ளார்.

இதையடுத்து அந்த மாணவர் பாடசாலை ஆசிரியர்களால் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அவர் இடைநடுவில் உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மொட்டுக் கட்சி எம்.பி...**

கே.எச்.நந்தசேன (வயது 69) காலமானார்.

திடீர் சுகவீனம் காரணமாக நேற்று அவர் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தநிலையில், அவர் இன்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

2020ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் முதன் முறையாக அவர், நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில், அவரின் மறைவையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அனுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த எம்.ஜி.வீரசேன நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்ட முன்னுரிமைப் பட்டியலில் எம்.ஜி.வீரசேன 38 ஆயிரத்து 241 விருப்பு வாக்குகளைபி பெற்று நந்தசேனவுக்கு அடுத்த இடத்தில் உள்ளார்.

**மைத்திரிபால...**

வரை அமுலாகும் வரை இந்த இடைக்காலக் கட்டாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் தாக்கல் செய்த முறைப்பாட்டுக்கமைய இந்த இடைக்காலக் கட்டாணை உத்தரவு இன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# கிடைக்கும் உதவியை கை நழுவ விடாது சரியான முறையில் பயன்படுத்துங்கள்!

(வாஸ் கூஞ்ஞ)

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட உயர்ந்த ரக மிளாய் விதைகளை இங்குள்ள விவசாயிகள் சரியான முறையில் பயன்படுத்தினால் உங்கள் வாழ்வதாரம் மேலும் உயர்ச்சி பெற வாய்ப்புக்கள் உண்டு. கிடைக்கும் உதவிகளைக் கை நழுவ விடாது சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.



மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேச செயலர் பிரிவிலுள்ள மீள்குடியேறி வாழும் பிச்சைவாணிப நெடுங்குளம் அலக்கட்டு, வேப்பங்குளம் அலக்கட்டு, அகத்தி முறிப்பு அலக்கட்டு மற்றும் பொற்கேணி அலக்கட்டு ஆகிய நான்கு கிராமங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 250 மிளகாய் செய்கை உற்பத்தியாளர்களுக்கு இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட உயர்தர வர்க்கம் கொண்ட மிளகாய் விதைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மீள்குடியேறி வாழ்வாதாரத்துக்கு மிகவும் கஷ்டப்பட்டு கொண்டு இருக்கும் உங்களுக்கு எவ்வாறு உதவி புரியலாம் என நீண்ட காலமாக எண்ணிக் கொண்டு இருந்தேன்.

இருந்தும் இறைவன் அருளால் ஒருவர் தனது சொந்த பணத்தில் தனது நிறுவனத்தின் மூலம் உதவி செய்ய வந்திருப்பது மகிழ்ச்சி தருகிறது.

இங்கு உதவி செய்ய வந்திருக்கும் கணேஷ் என்பவர் நாற்பது வருடங்களாக விவசாயப் பொருள்களை ஏற்றுமதி செய்து வருகிறார்.

இவரின் தந்தை விவசாயத் துறையில் மிகவும் பரீட்சியமானவர். பல பட்டங்களைப் பெற்றவர். இப்படிப்பட்டவருடன் இந்தக் கிராம மக்களுக்கு ஒரு தொடர்பு ஏற்பட்டு இருப்பது எதிர்காலத்துக்கு ஒரு சுபீட்சமாகும்.

விவசாயிகளாகிய நீங்கள் அதிக இலாபத்தை ஈட்டக் கூடிய விதத்தில் இந்த மிளகாய் பயிர் செய்கைக்கு உங்களுக்கு வழிகாட்டப்பட்டுள்ளது.

இந்தக் கிராமப் பகுதிக்குள் மீள்குடியேற வருகை தந்தபொழுது இதற்குள் வாழ முடியுமா என கேள்வி கேட்டவர்களும் உள்ளனர்.

இருந்தும் இதற்குள் வந்து முயற்சி செய்து தங்கள் வாழ்வாதாரத்துக்காக உழைத்து முன்னேற்றம் காண்போரும் உள்ளனர்.

இங்கு வழங்கப்படும் விதைகள் உயர்ந்த பயன்பாட்டைத் தரக் கூடிய விதைகளாகும். ஆகவே இதைத் கொண்டு நீங்கள் முன்னேற்றம் அடைய வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றது.

பச்சை மிளகாயை காய்ந்த மிளகாயாக்கப் பதம் தெரியாது இருக்கின்றோம் என இங்கு தெரிவித்தீர்கள். ஆனால் இந்த விதையானது காய்ந்த மிளகாய் பதத்துக்கு வரும் நிலை கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே உங்களுக்கு கொடுக்கப்பட்ட விதைகளை நீங்கள் சரியான முறையில் பயன்படுத்தி செயற்படுவீர்கள் என்றால் இவர்களால் உங்களுக்கு மேலும் உதவிகள் கிடைக்க வாய்ப்புக்கள் உள்ளன.- என்றார்.




# வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெற 75 ஆயிரம் இலங்கையர் வெளியேற்றம்!

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கு இந்த ஆண்டின் முதல் 3 மாதங்களில் மாத்திரம் சுமார் 75 ஆயிரம் இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் 74,499 பேர் வெளிநாடு சென்றுள்ளனர் என்று இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 39,900 பேர் ஆண் தொழிலாளர்கள் என்பதுடன் 34,599 பேர் பெண் தொழிலாளர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

17,793 இலங்கையர்கள் வேலை நிமித்தம் குவைத்துக்குச் சென்றுள்ளனர்.

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது, இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில், இலங்கையர்கள் தென் கொரியா, இஸ்ரேல் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளில் வேலை தேடும் போக்கு அதிகரித்துள்ளது.

2,374 பேர் தென்கொரியாவுக்கும், 2,114 பேர் இஸ்ரேலுக்கும், 1,899 பேர் ருமேனியாவுக்கும், 1,947 பேர் ஜப்பானுக்கும் சென்றுள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வேலை நிமித்தம் வெளிநாடு சென்ற இலங்கையர் இந்த வருடத்தின் முதல் 2 மாதங்களில் மாத்திரம் 963.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளனர் என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நாடாளுமன்றக் கலைப்பு; எங்ஙனம்?

நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைத்து, பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடச் செய்ய வைப்பதற்கு சில நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்னெடுக்கப்பட்ட முயற்சி பலிக்கவில்லை என்று சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று - இப்போதைய எம்.பிக்களில் பலர் புது முகங்கள். தங்களுடைய பதவிக் காலத்தை நேரத்துடன் முடிக்க அவர்கள் விரும்ப மாட்டார்கள். அடுத்த முறை எம்.பியாக வாய்ப்புக் கிடைக்குமோ என்று தெரியாத இக்கட்டு நிலையில் இருப்பவர்கள், தாங்களாகத் தங்கள் பதவியை நேரத்துடன் முடித்துக் கொள்ள இணங்க மாட்டார்கள் என்பது புரிந்து கொள்ளத் தக்கதே. தவிரவும், முதல் முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவான அவர்கள் ஒரு முழு பதவிக்காலம் - ஐந்து வருடங்கள் - எம்.பியாக இருந்தால்தான் ஓய்வூதியம் பெறும் தகுதியைப் ஈட்டுவர். பதவிக் காலத்தை நேரத்துடன் முடித்து, தமது ஓய்வூதிய வாய்ப்பை இழக்கும் ஏற்பாட்டைத் தாங்களே சேர்ந்து நின்று செய்ய அவர்கள் இணங்க மாட்டார்கள் என்பது தெளிவானது. ஆகவே இந்த முயற்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற முடியாமல் போனமை ஆச்சரியமன்று.

அடுத்தது - அப்படி ஒரு தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதன் மூலம் நாடாளுமன்றத்தைக் கலைக்கச் செய்யலாம் என்ற சட்ட அல்லது அரசமைப்பு ஏற்பாடு எதுவும் இல்லை. சில தரப்புக்கள் தவறான - கற்பனாவாத - கற்பிதங்களில் அப்படிக் கருத்துக்களை வெளியிட்டு, பிழையான கருத்துருவாக்கங்களை ஏற்படுத்தி, மக்களைக் குழப்பி வருகின்றனர்.

இந்த விடயத்தில் உண்மை நிலைமை - சட்ட மற்றும் அரசமைப்பு ஏற்பாடு - யாது என்று சுருக்கமாக நோக்குவது பொருத்தமானது.

ஜனாதிபதி மைத்திரியின் காலத்தில் 2015 இல் கொண்டுவரப்பட்ட 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தின்படி -

நாடாளுமன்றத்தின் 5 வருட பதவி காலத்தில் நான்கு வருடங்கள் முடியும் வரை நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது. அந்த நான்கு வருட காலத்துக்குள் நாடாளுமன்றம் தானாக மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினால் மட்டுமே நாடாளுமன்றத்தை அக்காலத்தில் ஜனாதிபதி கலைக்க முடியும் என்ற ஏற்பாடு இருந்தது.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின்படி -

நாடாளுமன்றத்தை அதன் முதல் ஆண்டு முடியும் வரை ஜனாதிபதி கலைக்க முடியாது. அந்த ஒரு வருட காலகட்டத்தில் நாடாளுமன்றம் சாதாரண பெரும்பான்மை மூலம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிக் கோரினால் நாடாளுமன்றக் கலைப்பு அதிகாரத்தை அச்சமயத்தில் ஜனாதிபதி பிரயோகிக்கலாம்.

ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்டுள்ள - தற்போதைய - 21ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் -

நாடாளுமன்றத்தை அதன் முதல் இரண்டரை ஆண்டு பதவிக்காலத்தில் ஜனாதிபதி கலைக்க முடியாது. அந்த காலகட்டத்தில் நாடாளுமன்றம் தானாக ஒரு தீர்மானத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றுமாயின் அந்தக் காலகட்டத்தில் அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தைப் பெறுவார்.

அதாவது, முதல் இரண்டே வருட காலத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் நாடாளுமன்றக் கலைப்புக்கான ஒரு தீர்மானத்தை நாடாளுமன்ற நிறைவேற்றினால் கூட, அதை ஜனாதிபதி கட்டாயம் செய்ய வேண்டும் என்று தற்போதைய அரசமைப்புத் திருத்தம் கூறவில்லை. ஜனாதிபதி விரும்பினால் அந்த நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் தமக்குக் கிடைக்கும் அதிகாரத்தை வைத்து நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம். அல்லது கலைகாமலும் விடலாம். ஒரே ஒரு விடயம், அப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் நாடாளுமன்றத்தில் இரண்டரை ஆண்டு கால ஆட்சி முடிவடைய முன்னரே அதை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிட்டிவிடும். ஆயினும் அதை பிரயோகிப்பதும் பிரயோகிக்காமல் இருப்பதும் ஜனாதிபதியின் தற்றுணிவு முடிவுக்கு உட்பட்டது.

இப்போது, இந்த நாடாளுமன்றத்தின் இரண்டரை ஆண்டு காலம் முடிந்து விட்டது. அதைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வந்துவிட்டது. இனி நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றித்தான் அந்த அதிகாரம் ஜனாதிபதிக்கு வர வேண்டும் என்பதல்ல. அப்படி ஒரு தீர்மானத்தை நாடாளுமன்றம் இப்போது நிறைவேற்றினாலும் கூட, அதைச் செயற்படுத்துமாறு - நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு - யாரும் ஜனாதிபதியை நிர்பந்திக்க முடியாது. அது அவரின் தனித்துவமான விசேட உரித்து. அவர் விரும்பினால் செய்யலாம். விரும்பாமல் விட்டால் செய்யாமலும் விடலாம்.

இந்த அரசமைப்பு நிலைப்பாட்டை யாவரும் புரிந்து வைத்திருப்பது நல்லது.

# சௌபாக்கியா வீடுகள் கையளிக்கும் நிகழ்வு





**(எஸ்.அஷ்ரப்கான்)**

சம்மாந்துறை சமூர்த்தி பிரிவின் ஏற்பாட்டில் ஹுதா வங்கிப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட சௌபாக்கியா வீடுகள் கையளிக்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனிபா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட சமூர்த்திப் பணிப்பாளர் எம்.ஏ.சி. அஹமது ஷாபீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீடுகளை திறந்து கையளித்தார்.

இந்த நிகழ்வுக்கு உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் யூ.எல்.எம் சலீம், மாவட்ட சமூக அபிவிருத்தி முகாமையாளர், அபிவிருத்தி உதவியாளர், வங்கிச் சங்க முகாமையாளர், திட்ட முகாமையாளர், வலய முகாமையாளர், சமூக அபிவிருத்தி உதவியாளர், வலய உதவி முகாமையாளர், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச மட்டத் தலைவர்,வங்கி கட்டுப் பாட்டுச் சபைத் தலைவர் என பலரும் கலந்து கொண்டனர்.



# மன்னார் பிரதேசக் கலாச்சார பேரவைக்கு புதிய நிர்வாகிகள்



**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் நகர் பிரதேச செயலர் பிரிவில் 2024 ஆம் ஆண்டுக்கு உரிய கலைஞர் ஒன்று கூடலும் கலாச்சார பேரவை புதிய நிர்வாகத் தெரிவும் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தலைமையில் மன்னார் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பல கலைஞர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இதில் மன்னார் பிரதேச செயலக கலாச்சார பேரவையின் நிர்வாக உறுப்பினர்களாக, தலைவர் – பிரதேச செயலாளர், செயலாளர் – கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர், உப தலைவர் – அருட்பணி டக்ளஸ் லோகு அடிகளார், உப செயலாளர் – எஸ்.ஏ.உதயன், பொருளாளர் – தர்மகுமாரக் குருக்கள். உறுப்பினர்கள் எஸ்.மைக்கல் கொலின், திருமதி எல்.எஸ்.கியூ ராஜ்குமார், ஆருமுகநாதன் முரளி, மன்னார் அமுதன் ஏ.டெலிஸ்ரன் , எஸ். ஆனந்த லியோன், எஸ்.ஏ.ராதா பெர்னாண்டோ , ஏ.அமல்ராஜ், ஏ.அஜந்த ரூபன் . அ.மரியநாயகம் அல்மேடா . எஸ்.எடின்பரோ, எஸ்.சதீஸ்வரன். திருமதி எஸ்.டெனிஸ்ரின் மற்றும் சேவியர் பெர்னாண்டோ ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# எதிர்காலத்தில் பெரும் தலைவர்களை விளையாட்டின் மூலம் உருவாக்கலாம்!

## இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் சுட்டிக்காட்டு

(எம். எப். றிபாஸ்)

விளையாட்டின் மூலம் இளைஞர்களின் தலைமைத்துவ பண்புகள் அதிகரிக்கும். எதிர்காலத்தில் சமூகத்தில் பெரும் தலைவர்கள் உருவாகுவார்கள். என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ.கே. அமீர் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை அந் நூர் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலையில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார்.

பாடசாலையின் அதிபர் அஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விசேட அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அமீர்,

பாடசாலைகள் கல்வியோடு, விளையாட்டையும் சமாந்திரமாகக் கொண்டு




செல்ல வேண்டும். தலைநகரிலுள்ள அதிகமான பாடசாலைகள் விளையாட்டுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றன.

கல்வியையும் விளையாட்டையும் சிறப்பாகப் பெற்றவர்கள் தொழில் வாய்ப்போடு சமூக அங்கீகாரத்தையும் இலகுவாக பெற்று வருகின்றனர்.

ஒரு விளையாட்டு வீரன் உடல் ஆரோக்கியத்தைத் தாண்டி சமூக தொடர்பாடலை அதிகமாக கொண்டுள்ளான். உலகத்தில் விளையாட்டு வீரனுக்குள்ள அங்கிகாரம் வேற எந்த துறைகளுக்கும் பெரிதாக இல்லை.

இந்தப் பாடசாலை தொடர்ச்சியாக விளையாட்டு போட்டிகளை நடத்த வேண்டும். அதற்காக எதிர்காலத்தில் என்னால் முடியுமான உதவிகளை வழங்கவுள்ளேன்.

பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், ஊர் பிரமுகர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்களின் பங்கு பற்றுதலுடன் சிறப்பான முறையில் இடம்பெறுவது மகிழ்ச்சி தருகிறது.- என்றார்.



# மூதூர் பாட்டாளிபுர மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(எச். எம். ஹலால்தீன்)

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாட்டாளிபுரம் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேன்பாட்டை அபிவிருத்தி செய்தல் என்ற நோக்குடன் மாணவர்களுக்கு உடைகள், புத்தகப் பைகள், பயன் தரும் மரக் கன்றுகள் என்பன மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

எம்கடமை அமைப்பின் பணிப்பாளர் இராசமாணிக்கம் ஜீவேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவி பொலிஸ் அத்தியாட்சகர் நிசங்க கொடமுன, சம்பூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துசார, மூதூர் வர்த்தக சங்க தலைவர் என் எச் பஸ்ரி நஜா, கிராம அபிவிருத்தி சங்கத்தினர், பாட்டாளிபுரம் அறநெறிபாடசாலை ஒருங்கிணைப்பாளர் நகுலேஸ்வரன், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் கலந்து கொண்டனர்.








# அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கல்!

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட பொத்துவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 150 விவசாயிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் விவசாய உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கில் 150 விவசாயிகளுக்கு நீர் பம்பிகள் மற்றும் கிருமி நாசினி தெளிப்பான் போன்ற விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.



இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே. ஜி. முத்துபண்டா உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# சர்வதேச பூச்சிய கழிவு தினத்தில் சிரமதானம்



(எம்.எம். றம்ஸீன்)

சர்வதேச பூச்சிய கழிவுகள் தினத்தை முன்னிட்டு காரைதீவு பிரதேச செயலகம், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பிரதேச சபை, காரைதீவு பசுமைக் கிராம கழகம், விபுலானந்த மத்திய கல்லூரி மற்றும் சண்முகா மகா வித்தியாலய சுற்றாடல் முன்னோடிக்கழகங்கள் இணைந்து ஒழுங்கு செய்திருந்த சிரமதான நிகழ்வுகள் காரைதீவு 03 ஆம் பிரிவு கடற்கரை மற்றும் காரைதீவு 07 ஆம் பிரிவு குளவெளி வீட்டுத்திட்டம் ஆகிய பகுதிகளில் இடம்பெற்றன.

ஒவ்வொரு வருடமும் மார்ச் 30 ஆம் திகதி சர்வதேச பூச்சிய கழிவுகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பு இளைஞர், யுவதிகளுக்கு இலவச கணினிப் பயிற்சிகள் ஆரம்பம்!





**(பழுவூரான்)**

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கு சிமாட் ஸ்ரீலங்கா நிறுவனத்தால் நடத்தப்படும் இலவச கணினிப் பயிற்சி நெறி மாவட்ட அரச அதிபர் திருமதி. ஜஸ்டினா முரளிதர னால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உயர்தரப் பரீட்சையின் பின்னர் பல்கலைக் கழகம் மற்றும் ஏனைய கற்கைநெறிகளைத் தொடர வாய்ப் புக் கிடைக்காத மாணவர்களுக்கு கணினி அறிவை வழங்கும் நோக்கு டன் சிமாட் ஸ்ரீலங்கா நிறுவனத் தின் மணிதவள அபிவிருத்தி உத்தி யோகத்தர்களினால் இந்தக் கணினி பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

உதவி மாவட்ட செயலாளர் ஜீ.பிரண வனின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மாவட்ட அரச அதி பர் ஜஸ்டினா முரளிதரன் இங்கு உரையாற்றுகையில்,

அரச உத்தியோகத்தர்கள் தமது கடமைப் பட்டியலுக்கு அப்பால் மாவட்ட நலன் கருதி ஏற்பாடு செய் துள்ள இந்தச் செயற்பாட்டுக்குப் பாராட்டுத் தெரிவித்தார். பயிற்சியா ளர்கள் பெறுமதிமிக்க இந்தப் பயிற் சியை வெற்றிகரமாக நிறைவு செய்ய வேண்டுமென கேட்டுக் கொண்டார். அவர்களுக்கும் வாழ்த்துத் தெரிவித் தார்.

இந்த நிகழ்வின்போது பயன் தரும் மரமும் இந்த வளாகத்தில் அரச அதி பரினால் நடப்பட்டது.

மனிதவள அபிவிருத்தி உத்தி யோகத்தர்களின் மாவட்ட இணைப்பா ளர் வீ.மைக்கல்கொலினின் வரவேற் புடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில், உதவி மாவட்டச் செயலாளர் பிரிவின் பதவி நிலை உதவியாளர் கே.எல். றிழா, கணினிப் பயிற்றுவிப்பாளர் ஏ.ஆர்.எம்.பாசில், மனிதவள அபி விருத்தி உத்தியோகத்தர்களான வை.சுகிர்தராஜா, வீ.திருவானந்தராசா, கே.திசன், யூ.சுரேஸ்குமார் மற்றும் பயிற்சியாளர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்றில் விஞ்ஞான கழகம் நடத்திய இளம் ஆய்வாளர்களின் அறிவியல் விழா!

**(வி.ரி.சகாதேவராஜா)**

அக்கரைப்பற்று ஸ்ரீஇராமகிருஷ்ணா கல்லூரியின் (தேசிய பாடசாலை) 'இளம் ஆய்வாளர்களின் அறிவியல் விழா' விஞ்ஞான ஆய்வு கூடத்தில் பாடசாலை பதில் அதிபர் கே.ஜயந்தன் தலைமை யில் இடம்பெற்றது.

இதில் மாணவர்கள் தங்களது ஆக்க பூர்வமான புத்தாக்கக் கண்டு பிடிப்புக்களை காட்சிப்படுத்திருந்த னர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் கல்வி வலயத்தின் பிர திக்கல்விப் பணிப்பாளர் கே. கமல மோகனதாசன், டாக்டர் திருமதி.சி. குணாளினி, பனங்காடு பிரதேச வைத் தியசாலை வைத்திய அதிகாரி ஆகி யோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

ஆலையடி வேம்பு கோட்டக் கல் விப் பணிப்பாளர் திருமதி எம். மயூரன், விஞ்ஞான ஆசிரிய ஆலோசர் திரு மதி ஆர். ஜயானந்தமூர்த்தி, விஞ்ஞான பாட இணைப்பாளர் திருமதி. ஏ. பவா னந்தன் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# சேவைநலன் பாராட்டு நிகழ்வு

(த.சுபேசன்)

தொண்டைமானாறு கிராமத்தில் நீண்ட காலமாக சேவையாற்றி அண்மையில் இளைப்பாறிச் பெற்றுச் சென்ற கிராம அலுவலர் நடராசா சேகர் மற்றும் சமுர்த்தி அலுவலர் திருமதி சுபாகரன் உதயநிலா ஆகியோருக்கான சேவைநலன் பாராட்டு நிகழ்வு அண்மையில் தொண்டைமானாறு கலைவாணி சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

தொண்டைமனாறு கிராம மக்கள் ஒன்றிணைந்து உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பை வழங்கினர்.



# றமழான் மாதத்தை முன்னிட்டு நோன்புப் பொதிகள் வழங்கல்






(த.சுபேசன்)

சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்கான நிலையத்தால் புனித றமழான் மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பள்ளிக் குடியிருப்பில் வசிக்கும் 24 இஸ்லாமியக் குடும்பங்களுக்கு அண்மையில் நோன்புப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக முன்னெடுக்கப்பட்ட நோன்புப் பொதி வழங்கும் நிகழ்வில் சட்டத்துக்கும் மனித உரிமைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் மற்றும் நிலையத்தின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# இராணுவத்தினரின் உதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகள் கையளிப்பு





**(த.சுபேசன்)**

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வரணி – நாவற்காட்டுக் கிராமத்தில் தேவைப்பாடுடைய இரு குடும்பங்களுக்கு இலங்கை இராணுவத்தின் உதவியுடன் வீடுகள் அமைக்கப்பட்டுக் கையளிக்கப்பட்டுள்ளன.

கையளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க கலந்து கொண்டு வீடுகளைக் கையளித்திருந்தார்.

மேற்படி வீடுகள் தலா 20 லட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீடு கையளிப்பு நிகழ்வில் 52 ஆவது படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் ஜகம்பக் கலந்து கொண்டார்.

# கிளிநொச்சியில் நடைபெற்றுள்ள மனித உரிமைகள் விழிப்புணர்வு!





மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள், சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வடக்கு மாகாண இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

கரைச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர்.




# ஆவரங்கால் சர்வோதய வி.க. புதிய நிர்வாகிகள் தெரிவு!

ஆவரங்கால் சர்வோதய விளையாட்டுக் கழக புதிய நிர்வாகத் தெரிவும் பொதுக் கூட்டமும் சர்வோதய சனசமூக நிலையக் கட்டடத்தில் நடைபெற்றன.

இதில் விளையாட்டுக் கழகத்தின் புதிய தலைவராக ம.கோகுலன் தெரிவானார். செயலாளராக யோ.செந்தூரனும், பொருளாளராக கஜீபனும் தெரிவாகினர்.

அதேவேளை, ஏனைய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவாகி, விளையாட்டுக் கழகத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.




# ஹைதரபாத் அணியின் வீரர் நடராஜனின் பிறந்த தினத்தில் கலந்து கொண்ட அஜித்!

சன்ரைசர்ஸ் ஹைதரபாத் அணியின் வீரர் நடராஜன் தனது பிறந்த நாளை நடிகர் அஜித்குமாருடன் கொண்டாடிய புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.

இந்த ஆண்டுக்கான ஐபிஎல் சீசன் தற்போது நடைபெற்று வருகிறது. இதில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிக்காக தமிழக வீரர் நடராஜன் ஆடி வருகிறார். இவர் இன்று (04) தனது 33 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

இதற்கான பிறந்தநாள் விழா ஹைதராபாத்தில் நள்ளிரவில் நடைபெற்றது. இதில் நடராஜன் கேக் வெட்டி தனது பிறந்தநாளை கொண்டாடினார். இந்த விழாவில் நடிகர் அஜித் கலந்து கொண்டு நடராஜனை வாழ்த்தினார். இருவரும் மாறி மாறி கேக் ஊட்டிக் கொள்ளும் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

மத்திய பிரதேசத்துக்கு பைக் பயணம் சென்றிருந்த அஜித் அண்மையில் அங்கிருந்து திரும்பி வந்தார். விரைவில் 'விடாமுயற்சி' படத்தின் அடுத்தகட்ட படப்பிடிப்பு தொடங்கவுள்ளது. இதனை யடுத்து ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கும் 'குட் பேட் அக்லி' படத்தில் அஜித் நடிக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பாஜகவுடன் கூட்டணி வைக்க வேண்டும் என்று எமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது

## தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா குற்றச்சாட்டு

பாஜகவுடன் கூட்டணி வைக்க வேண்டும் என அச்சுறுத்தல் வந்தது. ஜெயலலிதா போல் தைரியமாக முடிவெடுத்தேன் என்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் குற்றச்சாட்டு தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் தொகுதியில் அதிமுக கூட்டணி சார்பில் தேமுதிக போட்டியிடுகிறது. தேமுதிக வேட்பாளராக நல்லதம்பி போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

பொன்னேரியில் நடந்த பிரச்சாரத்தில் பேசிய பிரேமலதா, "அதிமுக அலுவலகத்தில் கூட்டணி ஒப்பந்தம் போடும்வரை பாஜகவிடம் இருந்து எவ்வளவோ நிர்பந்தங்கள் வந்தன. எல்லாவற்றையும் தூக்கியெறிந்து தைரியமாக ஜெயலலிதா மாதிரி முடிவெடுத்தேன். இந்த முறை கூட்டணி அதிமுக உடன்தான். இதில் எந்தவித மாற்றமும் இல்லை என்று உறுதியாக இருந்தேன். மக்களுக்காக இந்த முடிவை எடுத்தேன்.

பாஜகவிடம் இருந்து எத்தனையோ நிர்பந்தங்கள் வந்தன. எங்களின் வங்கி கணக்குகளை எல்லாம் முடக்குவோம் என்று பயமுறுத்தினார்கள். நாங்கள் பனங்காட்டு நரி. எந்த சலசலப்புக்கு அஞ்ச மாட்டோம். எத்தனை சோதனைகள் வந்தாலும் பயப்படப்போவது இல்லை." என்று கூறினார்.

# ஓரங்கட்டப்பட்டு வருகிறார் புகழேந்தி; கௌதம சிகாமணிக்கு வாய்ப்புக்கள்!

விழுப்புரம் திமுக தெற்கு மாவட்ட செயலாளரான புகழேந்தி எம்எல்ஏ ஓரங்கப்பட்டு வருகிறார் என்றும் அதற்கு மாற்றாக திமுக தெற்கு மாவட்ட செயலாளராக கௌதம சிகாமணியை நியமிக்க வாய்ப்பு அதிகம் உள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விழுப்புரம் திமுக தெற்கு மாவட்டத்தில் விழுப்புரம், விக்கிரவாண்டி, வானூர், திருக்கோவிலூர் ஆகிய நான்கு தொகுதிகளைக் கடந்த சட்டமன்ற தேர்தலில் தலா 2 தொகுதிகளை அதிமுகவும், திமுகவும் பிரித்துக்கொண்டன. தற்போது விழுப்புரம் மக்களவை தொகுதியில் இந்த 4 தொகுதிகளில் திண்டிவனம் மற்றும் உளுந்தூர் பேட்டைத் தொகுதிகள் இடம்பெற்றுள்ளது.

கடந்த மக்களவைத் தொகுதியில் விசிக வேட்பாளர் ரவிகுமார் உதய சூரியன் சின்னத்தில், போட்டியிட்டு வெற்றிபெற்றார். இந்தத் தேர்தலில் விசிக பானை சின்னத்திலும், அதிமுக இரட்டை இலை சின்னத்திலும், பாமக மாம்பழ சின்னத்திலும் போட்டியிடுகின்றன.

விழுப்புரம் திமுக தெற்கு மாவட்ட செயலாளரான புகழேந்தி உடல்நலக் குறைவால் சென்னை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இந்த நிலையில் மாவட்ட செயலாளர் பொறுப்பை அமைச்சர் பொன்முடியின் மகன் கௌதம சிகாமணி எம்பி எடுத்துக்கொண்டு செயல்படுகிறாரோ என்ற எண்ணம் ஏற்படும் வகையில் விழுப்புரத்தில் விசிக வேட்பாளர் ரவிகுமாரை ஆதரித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.



“நம் அமைச்சர் பொன்முடி 35 ஆண்டுகள் கலைஞரோடு பயணித்தவர், கலைஞரின் தம்பி, நம் தலைவரின் தளபதி, என் அரசியல் வழிகாட்டி, அவர் இல்லை என்றால் நான் கிடையாது.

அவருக்குக் கௌதம சிகாமணி எப்படி ஒரு பிள்ளையோ, அப்படி நானும் ஒரு பிள்ளை. அதனால்தான் நான் என் உடன்பிறவா சகோதரர் கௌதம சிகாமணி என்று சொன்னேன். எந்த நேரத்திலும் விட்டுக்கொடுக்கமாட்டோம். தலைவரும் அமைச்சர் பொன்முடியையும், கௌதம சிகாமணியையும் எக்காரணத்தை கொண்டும் விட்டுக்கொடுக்க மாட்டார்” என்று பேசினார்.

அப்போது கூட மாவட்ட செயலாளரான புகழேந்தி பெயரை உச்சரிக்கவில்லை.

இது குறித்து திமுக நிர்வாகிகளிடம் கேட்டபோது, “விழுப்புரம் மாவட்டச் செயலாளர் பதவியை குறிவைத்துதான் கள்ளக் குறிச்சியில் திமுக சார்பில் கௌதம சிகாமணி எம்பி போட்டியிட பொன்முடி விரும்பவில்லை. தற்போதே உளுந்தூர்பேட்டை தொகுதியில் எம்எல்ஏ மணிக்கண்ணனை ஓரங்கட்டி விட்டு, உளுந்தூர்பேட்டை நகராட்சி துணைத்தலைவர் வைத்தியநாதனையும், விழுப்புரம் தொகுதியை கௌதம சிகாமணி பொறுப்பிலும், விக்கிவாண்டி தொகுதிகளுக்கு மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் ஜெயசந்திரன், வானூர் தொகுதியில் முன்னாள் எம்எல்ஏ புஷ்பராஜும் தொகுதி பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்கள்.

இவர்கள் அனைவரும் பொன்முடியின் ஆதரவாளர்கள். விழுப்புரம் எம்எல்ஏ லட்சுமணனுக்கு தேர்தல் தொடர்பான எவ்வித பொறுப்பும் கொடுக்கவில்லை. எனவே ஏப்ரல் 19 ஆம் திகதிக்குப் பின் மாவட்டச் செயலாளராக கௌதம சிகாமணி நியமிக்க வாய்ப்பு அதிகம்” என்றனர்.

கடந்த விக்கிரவாண்டி இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் திமுக தலைவர் ஸ்டாலின் பேசும்போது, “திமுக ஆட்சிக்கு வந்தவுடன் கல்வி, வேலைவாய்ப்பில் பெரும்பான்மை சமுதாயமான வன்னியர்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்கப்படும்” என்றார்.

இதற்குப் பதிலளித்து பேசிய பாமக நிறுவனர் ராமதாஸ், “முதலில் திமுகவில் பெரும்பான்மை சமுதாயமான வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கவும். பின்னர் உள் ஒதுக்கீடு பற்றி பேசலாம்” என்றார்.

இதையடுத்து விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளராக கடந்த 2020 செப்ரெம்பர் 17 ஆம் திகதி மாவட்டச் செயலாளர் பதவிக்கு அப்போதைய மாவட்ட அவைத்தலைவர் புகழேந்தி வேட்புமனு தாக்கல் செய்தார். இதனை தொடர்ந்து அமைச்சர் பொன்முடியிடம் இருந்த மாவட்டச் செயலாளர் பதவி சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து திமுகவில் இருக்கும் புகழேந்திக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சுருக்குப் பையில் இருக்கும் பணத்தையும் பறித்து எடுத்ததுதான் பாஜகவின் ஆட்சி!

## இப்படி விமர்சித்துள்ளார் முதல்வர் ஸ்டாலின்

சுருக்குப் பையில் இருக்கும் பணத் தையும் பறித்துக் கொள்ளும் ஆட்சியாக, அபராதம் விதித்தே 21 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் ஏழைகளிடம் உருவியி ருக்கிறார்கள என்று பாஜக ஆட்சியை முதல்வர் ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாகத் தனது எக்ஸ் பக் கத்தில், மோடியின் ‘புதிய இந்தியா’வில் டிஜிட்டல் வழிப்பறி. ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் என்று எளிய மக்களின் ஆசையைத் தூண்டி ஆட் சிக்கு வந்தவர்கள் செய்தது என்ன?

சிறுகச் சிறுகச் சேர்த்த பணத்தையும் செல்லாததாக்கி, வங்கிகளில் வரிசை யில் நிற்க வைத்து வதைத்தார்கள்.

சுருக்குப் பையில் இருக்கும் பணத் தையும் பறித்துக் கொள்ளும் ஆட்சியாக, மினிமம் பேலன்ஸ் இல்லை என அபராதம் விதித்தே 21 ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் ஏழைகளிடம் உருவியி ருக்கிறார்.

கார்ப்பரேட்களுக்குப் பல லட்சம் கோடி கடன் தள்ளுபடி, கார்ப்பரேட் வரியை 30 விழுக்காட்டில் இருந்து 22 விழுக்காடாக குறைத்து, ஆண்டுதோறும் லட்சக் கணக்கான



கோடிகளை வரிச்சலுகையாக அள்ளித் தந்துவிட்டு, அதை ஈடுகட்ட, மனதில் ஈரமே இல்லாமல், அல்லற்படும் ஏழை மக்களிடம் அரசே இப்படி டிஜிட்டல் வழிப்பறி செய்வதை அனுமதிக்கலாமா?.

இது பணக்காரர்கள், கோடீஸ்வரர்களுக்கான அரசு அல்ல. ஏழைகளுக்கான அரசு எனக் கூசாமல் புளுகுகிறார் பிரதமர் மோடி. இதுவா ஏழைகளின் நலன் காக்கும் அரசு?” என்று காட்டமாக விமர்சித்துள்ளார்.

# ரஷ்யாவின் ஆளில்லா விமானம் இன்று உக்ரைனில் தாக்குதல்!

உக்ரைனின் கார்கிவ் நகரில் ரஷ்யா மீண்டும் ஆளில்லா விமானத் தாக்குதல் களை மேற்கொண்டுள்ளது.

குறித்த தாக்குதல் இன்று (04) அதிகாலை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

கார்கிவ் நகர் மீது ரஷ்யா மேற் கொண்ட தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந்த நகரத் தின் ஆளுநர் ஒலே சினேஹுபோவ் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மீட்புப் பணியாளர் கள் தாக்குதல் நடத்தப்பட்ட இடங்களுக்கு வருகைத்தந்த பின்னரும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கார்கிவ் நகரில் இன்று அதிகாலை நான்கு தடவைகள் ஆளில்லா விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள் ளன.



குறித்த பகுதியில் உள்ள அடுக்குமாடி கட்டடங்கள் இதனால் பாரியளவில் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# இஸ்ரேலுக்கு எதிராக இணையத் தாக்குதல் நடத்தவுள்ளதாக எச்சரித்துள்ளது ஈரான்!




இஸ்ரேலுக்கு எதிராகத் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு இணையதள தாக்குதல்களை நடத்தவுள்ளது என்று ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இதன்படி, ஈரானின் ஜெருசலேம் தினம் நாளை (05) கொண்டாடப்பட வுள்ளது. இந்த நாளில், ஜெருசலேம் என்ற ஹேஷ்டக்கின் கீழ் அச்சுறுத்தலை ஏற்படுத்த ஈரான் திட்டமிட்டுள்ளது.

இதேபோன்று, எதிர்வரும் 7 ஆம் திகதியும் தாக்குதல் நடத்த திட்டமிடப் பட்டுள்ளது. அந்தவகையில் நாளை முதல் 07ஆம் திகதி வரை தொடர்ந்து 03 நாட்களுக்கு இணையதள தாக்கு தல்கள் இடம்பெறவுள்ளது.

இஸ்ரேல் அரசுக்கு எதிராக, இந்த நாள்களில் இணையத்தள தாக்குதல் களை நடத்த வேண்டும் என்று உலகம் முழுவதும் இருந்து மக்களுக்கு ஈரான் அழைப்பு விடுத்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையில் ஈரானின் ஜெரு சலேம் தினம் கொண்டாடப்படுகிறது.

அன்றைய நாளில், இணையதளத் தில் இஸ்ரேலுக்கு எதிராக பாதிப்பை ஏற்படுத்த கூடிய செயற்பாடுகள் மேற் கொள்ளப்படும். இதன்படி, வலைதளங் கள் திருடப்படுதல், குறுஞ்செய்திகள், தொலைபேசி அழைப்புகள், இ-மெயில் கள் வழியே போலியான செய்திகளை பரப்புதல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் தனிநபர்களின் கணினிகளில் வைரஸ் பதிவிறக்க தாக்குதல் ஏற்படுத்துவது, வங்கி விவரங்களை திருடுவது அல்லது பிற தனிப்பட்ட தகவல்களை திருடுவது போன்ற திட்டமிட்ட தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், சமூக வலைதள இணைப்பு களை திருடுதல், நிறுவனங்களின் தகவல்களில் ஊடுருவுதல், தகவல்களை கசிய விடுதல், தாக்குதல்களை ஊக்கு விக்கும் வகையிலான செய்திகளைப் பரப்பி, பகிர்தல் போன்ற தேவையற்ற செயல்களும் ஒவ்வோர் ஆண்டும் இந்தக் காலகட்டத்தில் நடைபெறும்.

இதனை முன்னிட்டு இஸ்ரேல் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி, அந்த நாட்டின் தேசிய இணையத்தளம் எச்சரிக்கை விடுத்துள்ளது, இதில், இஸ்ரேல் அமைப்புகள் மட்டுமின்றி, தனிநபர் மற்றும் பொது மக்கள் என பல ரின் வலைத் தளங்கள், வலைய மைப் புக்கள் போன்றவை இலக்குகளாகக் கொள்ளப்படும் என்றும் கூறப்படுகிறது.

இதனால், இணையதள சேவைகள் பாதிக்கப்பட கூடும், பொய்யான செய்தி கள் பரவ கூடும் என இயங்குநரகம் எச்சரித்துள்ளது. கடந்த ஆண்டுகளிலும் இந்த காலகட்டத்தில், இதுபோன்ற தாக்குதல்கள் அடையாளம் காணப்பட் டுள்ளதனாலேயே இந்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட் டுள்ளது.

# உக்ரைனுக்கு இராணுவத்தை அனுப்பினால் பிரான்ஸ் பிரச்சினையைத் தேடிக் கொள்ளும்

## ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு






பிரான்ஸ் உக்ரைனுக்கு இராணுவ வீரர்களை அனுப்பினால், பிரான்ஸ் தனக்குத் தானே பிரச்சினையை உருவாக்கிக் கொண்டதை போன்ற விளைவுகளை சந்திக்க நேரும் என்று ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகியுள்ள நிலையில், இந்தப் போரில் அமெரிக்கா உட்பட பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு உதவி செய்து வருகின்றன.

குறிப்பாக அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகள் உதவி வருகின்றன, உக்ரைனுக்குத் தேவையான ஆயுதங்களைக் கொடுத்து பக்கபலமாக இருந்து வருகின்றன.

இந்த நிலையில், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரான் கடந்த பெப்ரவரி மாதம் மேற்கத்தய நாடுகளின் துருப்புகள் உக்ரைனுக்கு அனுப்பி வைக்கப்படுவதை புறந்தள்ளி விட முடியாது என தெரிவித்திருந்தார். இதன்வாயிலாக தேவைப்பட்டால் பிரான்ஸ், உக்ரைனுக்கு ராணுவ வீரர்களை அனுப்பும் என்பதை சூசகமாகத் தெரி வித்திருந்தார்.

இந்த நிலையில் ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் செர்கெய் சோய்கு, பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் செபஸ்டியன் லெகோர்னு உடன் தொலைபேசியில் பேசியுள்ளார்.

அப்போது செர்கெய் "பிரான்ஸ் அதிபர் மக்ரான் ஏற்கனவே அறிவித்ததன்படி, அதனை பின்பற்றினால், அது பிரான்ஸ் தனக்குத்தானே பிரச்சினையை உருவாக்கிக் கொள்வதாக அமையும்" என செபஸ்டியன் லெகோர்னுவிடம் எச்சரித்துள்ளார்.

மேலும், "உக்ரைன் மேற்கத்தய நாடுகளின் அனுமதி இல்லாமல் எதையும் செய்வதில்லை, பிரான்ஸ் உக்ரைனுக்கு உதவுவதாக சிறப்பு வேலைகளில் ஈடுபடாது என நம்புகிறோம்" எனவும் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையிலான போருக்குப் பின்னர் மேற்கத்தய நாடுகள் ரஷ்யாவுடனான தொடர்புகள் அனைத்தையும் துண்டித்துள்ள நிலையில் ரஷ்யா பாதுகாப்பு அமைச்சர் நீண்ட கால இடைவெளிக்குப்பின் அரிதாக பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சருடன் மீண்டும் பேசியுள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்குப் பிறகு இரு நாட்டின் பாதுகாப்பு அமைச்சர்களும் முதன் முறையாக தற்போது பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாலைதீவில் இருந்து இந்திய இராணுவம் இரண்டாவது குழு இம்மாதம் வெளியேறும்

## அந்த நாட்டு ஜனாதிபதி முயிஸ் தெரிவிப்பு



மாலைதீவில் இருந்து இந்திய இராணுவப் படையின் 2 ஆவது குழு இந்த மாதத்துக்குள் வெளியேறும் என்று அந்த நாட்டு ஜனாதிபதி முயிஸ் தெரிவித்துள்ளா.

மாலைதீவுக்கு மருத்துவ உதவி மற்றும் மனிதாபிமான சேவைகளுக்காக இரண்டு அதிநவீன இலகுரக ஹெலிகொப்டர்கள், ஒரு டர்னியா விமானம் ஆகியவற்றை இந்தியா வழங்கியது.

அவற்றை அந்த நாட்டில் பராமரித்து, இயக்குவது உள்ளிட்ட பணிகளில் 88 இந்திய ராணுவத்தினர் ஈடுபட்டனர்.

அவர்களைத் திரும்பப் பெறுமாறு சீன ஆதரவாளரான ஜனாதிபதி முயிஸ் இந்திய அரசிடம் வலியுறுத்தினார். இதனால் இந்தியா, மாலைதீவு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது.

கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதி டில்லியில் இரு நாடுகளுக்கு இடையே உயர் நிலைக் குழு கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்துக்குப் பின்னர், மே 10 ஆம் திகதிக்குள் மாலைதீவில் உள்ள இந்திய ராணுவத்தினர் முற்றிலும் திரும்ப அனுப்பப்படுவார்கள் என்று மாலைதீவு வெளியுறவுத் துறை தெரிவித்தது.

அதேவேளையில், மாலைதீவுக்கு இந்தியா வழங்கிய ஹெலிகொப்டர்கள் மற்றும் விமானத்தை பராமரித்து இயக்க, இந்திய இராணுவத்துக்குப் பதிலாக நிபுணத்துவம் பெற்றவர்களை அந்த நாட்டுக்கு மத்திய அரசு அனுப்ப மாலைதீவு ஒப்புக்கொண்டது.

இதையடுத்து மாலைதீவில் இந்தியா வழங்கிய ஹெலிகொப்டருக்கு பொறுப்பேற்க இராணுவம் அல்லாத 26 பேர் அடங்கிய குழுவை மத்திய அரசு அனுப்பி வைத்தது.

இதைத் தொடர்ந்து கடந்த சில நாள்களுக்கு முன்னர், அந்த நாட்டில் இருந்து சுமார் 25 இந்திய இராணுவத்தினர் அடங்கிய முதல் குழு நாடு திரும்பியது.

இந்த நிலையில், மாலைதீவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி முயிஸ் பேசுகையில், 'இந்த மாதத்துக்குள் இந்திய படையினரின் 2 ஆவது குழுவும், மே 10 இற்குள் இந்திய படையினரின் 3 ஆவது குழுவும் மாலைதீவில் இருந்து வெளியேறும்' என்று கூறியதாக அந்த நாட்டு ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் 04
கனடா முரசு
வியாழக்கிழமை 04/04/2024

## 14 மாத குழந்தை மரணம் இருவர் மீது குற்றச்சாட்டு

கியூபெக்,ஏப்ரல்04

கியூபெக் நகரில் குழந்தை பராமரிப்பு நிலையத்தில் 14 மாத குழந்தை ஒன்று உயிரிழந்தமை தொடர்பில் இரு நபர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

C2




# களவாடப்பட்ட600 வாகனங்கள் மொன்ரியல் துறைமுகத்தில் மீட்பு

### வெளிநாடுகளுக்கு ஏற்றப்பட இருந்த சமயத்தில்

**கியூபெக்,ஏப்ரல்04**

**களவாடப்பட்ட அறுநூறு வாகனங்களை, மொன்ரியல் துறைமுகத்திலிருந்து வெளி நாடுகளுக்கு அவை கொண்டு செல்லப் படவிருந்த வேளையில் ஒன்ராரியோ பொலி ஸாருடன் இணைந்து, கனடிய எல்லைப் பாதுகாப்பு சேவை நிறுவனம் கைப்பற் றியுள்ளது.**

34.5 மில்லியன் டொலர்கள் பெறு மதியான சுமார் 598 வாகனங்கள் 390 கொன்டெய்னர்களில் வெளிநாடு களுக்கு கொண்டு செல்லப்படவிருந்தன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் அதிகரித்துள்ள வாக னத் திருட்டு தொடர்பான விசாரணை களின் போது, களவாடப்படும் வாகனங் கள் மொன்ரியல் துறைமுகம் ஊடாக வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்ப டுகின்றன எனக் கிடைத்த தகவலுக்கமை யவே இந்த தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக ஒன்ராரியோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட வாகனங்களில் 430இற்கு மேற்பட்டவை டொரன்டோ பெருநகரப் பகுதியைச் சேர்ந்தவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்பட வில்லை எனத் தெரிவிக்கப்படுகின் றது.

2023ஆம் ஆண்டில் கனடாவில் சுமார் 70.475 வாகனங்கள் களவாடப் பட்டுள்ளன. அவற்றில் 30,000 வாக னங்கள் ஒன்ராரியோ மாகாணத்தில் இருந்து களவாடப்பட்டுள்ளது.

# தேர்தல்களில் வெளித் தரப்பின் தலையீடு கன்சர்வேடிவ் முன்னாள் தலைவர் விசனம்

ஒன்ராரியோ,ஏப்ரல்04

வெளிநாட்டுத் தலையீட்டை எதிர்த்துப் போராடுவதற்கான கனடாவின் தேசிய அணுகுமுறை வாக்காளர்களுக்கு நியா யமற்றது என்று கன்சர்வேடிவ் கட்சியின் முன்னாள் தலைவர் எரின் ஓடூல் தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு தேர்தல் இரவில் தான் பிரதமராகப் போவதில்லை என்பது தமக்கு தெளிவாகத் தெரிந்தது எனவும், பல தொகுதிகளின் தேர்தல் முடிவுகள் தமக்கு அதிர்ச்சியைத் தந்தன எனவும்



அவர் தெரிவித்துள்ளார்.

கனடியத் தேர்தல்களில் வெளிநாட்டு சக்திகளின் தலையீடு தொடர்பில் கனடிய மத்திய அரசாங்கத்தினால் அண்மைக் காலமாக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

CSIS, RCMP, வெளிவிவகாரத் திணைக்களம் மற்றும் தொலைத் தொடர் புகள் பாதுகாப்பு நிறுவனம் உள்ளடங் கலாக தேர்தல் படையணிக்கு பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை அச்சுறுத்தல் க ளுடன் ஒன்பது தேர்தல் தொகுதிகளில் வெளிநாட்டு தலையீடு குறித்த கரிச னைகளை தமது குழு ஏற்கனவே சுட் டிக் காட்டியிருந்ததாக ஓடுல் கூறியுள் ளார்.



# அடுக்குமாடித் தொடர் நிர்மாணத்திற்கு கடன் வழங்க15 பில்லியன் டொலர்கள்

ஒன்ராரியோ,ஏப்ரல்04

மத்திய அரசாங்கத்தின் புதிய வரவு – செலவுத் திட்டத்தின் அடுக்குமாடித் தொடர் நிர்மாணத்திற்கு கடன் வழங்குவதற்காக 15 பில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

அடுக்குமாடித் தொடர்களை விரைவில் நிர்மாணிக்கும் செயற்பாட்டின் ஒரு கட்டமாக இந்த திட்டம் அமைந்திருப்பதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்தார்.

இந்த புதிய நிதியானது வீடமைப்புக்காக கிடைக்கக் கூடிய தொகையை 55 பில்லியன் டொலர்களாக்கியுள்ளது.

அடுத்த தசாப்தத்திற்குள் 130,000 வீட்டுத்தொடர்களை அமைப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

2017ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில் இதுவரை 48,000 இல்லங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.




## 14 மாத குழந்தை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

25 வயதான பெண் ஒருவருக்கு ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி இரண்டாம் நிலை கொலைக் குற்றச்சாட்டு இன்று சுமத்தப்பட்டது.

30 வயதான சக சந்தேநபருடன் குறித்த பெண் நீதிமன்றத்தில் இன்று முன்னிலையாக்கப்பட்ட போதே இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் இருவரையும் பொலிஸார் கடந்த வாரம் கைது செய்தனர்.

குழந்தை பராமரிப்பு நிலையத்தில் குழந்தை ஒன்று சுயநினைவிழந்து இருப்பதாக மார்ச் 21ஆம் திகதி பொலிஸாருக்கு அழைப்பு வந்துள்ளது.

முதலுதவியளிப்பவர்கள் சுயநினைவற்றிருந்த குழந்தையை காப்பாற்றுவதற்கு முயற்சித்த போதிலும், சிகிச்சைப் பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது.

# மருத்துவக் கல்லூரிகளில் முழு இடங்களையுமே மாகாண மாணவருக்கு மட்டுமே வழங்கவேண்டும்

## ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட் வலியுறுத்தல்

ஒன்ராரியோ,ஏப்ரல்04

ஒன்ராரியோ மருத்துவக் கல்லூரிகளில் அனைத்து இடங்களும் மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்று தான் விரும்புகின்றார் என ஒன்ராரியோ முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

ஒன்ராரியோ மாகாண மருத்துவப் பாடசாலைகளில் சுமார் 18 சதவீத மாணவர்கள் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வி அமைச்சுடன் இணைந்து செயற்பட்டு, 18 சதவீத வெளிநாட்டு மாணவர்களை அகற்றி, முழுமையாக மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்காக மாற்றுவோம் என முதல்வர் போர்ட் தெரிவித்துள்ளார்.

யோர்க் பல்கலைக்கழகத்தின் புதிய மருத்துவப் பீடம் திறந்து வைப்பதற்கான நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, போர்ட் இதனைக் கூறியுள்ளார்.







# வாகனத்துடன் மோதுண்ட பாதசாரிக்குக் கடுங்காயம்

ஒன்ராரியோ,ஏப்ரல்04

டொராண்டோவின் மேற்கு பகுதியில் வாகனம் ஒன்றினால் மோதப்பட்ட பாதசாரி ஒருவர் கடுமையான, உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

லிட்டில் போர்ச்சுகல் சுற்றுப்புறத்தில், டன்டாஸ் ஸ்ட்ரீட் வெஸ்ட் மற்றும் ருஷோல்ம் டிரைவ், டஃபெரின் தெருவின் கிழக்கே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஏப்ரல் 3ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு இந்த விபத்து தொடர்பில் தமக்கு தகவல் கிடைத்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தினைத் தொடர்ந்து சில மணித்தியாலங்கள் குறித்து பாதை போக்குவரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

# பூர்வீகக் குடிகளின் முன்னாள் தலைவர் பிரிட்டிஷ் கொலம்பியா மன்றில் வழக்கு


பிரிட்டிஷ் கொலம்பியா,ஏப்ரல்04

பிரிட்டிஷ் கொலம்பியாவின் 10 சதவீதத்திற்கும் அதிகமான பிரதேசத்தை உள்ளடக்கிய பூர்வீகக் குடிகளின் முன்னாள் தலைவர் அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

தம்மைக் கட்டாயப்படுத்தி பதவி விலகச் செய்தனர் என சாட் நோர்மன் அலெக்ஸாண்டர் டே தெரிவித்துள்ளார்.

தனது அதிகாரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தத் தீர்மானித்த அரசியல் எதிரிகளால் ‘கடுமையான, அடக்குமுறை, உயர்குடி மற்றும் கண்டிக்கத்தக்க’ நடத்தைக்கு தாம் உள்ளாக்கப்பட்டார் என பிரிட்டிஷ் கொலம்பியாவின் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் அவர் குறிப்பிட் டுள்ளார்.

தாம் தலைவராக பணிபுரிந்து அரசாங்கத்தின் மீது நடவடிக்கை எடுப்பது என்பது தமக்கு மனவருத்தம் தரும் செயல் எனவும் அவர் கூறியுள்ளார்.





# பனிப்புயல் எச்சரிக்கை

ஒன்ராரியோ,ஏப்ரல்04

ஒட்டாவாவில் இந்த ஆண்டின் மிகப்பெரிய பனிப்புயல் ஏப்ரல் 3 மற்றும் 4 ஆகிய திக்திகளில் வரக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

ஒட்டாவா ஆற்றின் ஒன்ராரியோ கரையோரத்தில் தெற்கில் உள்ள சமூகங்களுக்கான பனிப்பொழிவு எச்சரிக்கையாக செவ்வாய்கிழமை சிறப்பு வானிலை அறிக்கைகள் பலவற்றை சுற்றுச்சூழல் கனடா மேம்படுத்தியிருந்தது.

ஒட்டாவா மற்றும் அதன் தெற்கு மற்றும் கிழக்கில் உள்ள ப்ரோக்வில்லி மற்றும் ஹாக்ஸ்பரி, பிளஸ் கேட்டினோ போன்ற சமூகங்களில் புதன்கிழமை முதல் மழை பெய்யும், அதைத் தொடர்ந்து பிற்பகல் அல்லது மாலையில் பனிப்பொழிவு ஏற்படும்.

பத்து முதல் 20 சென்டிமீட்டர் வரை பனிப்பொழிவு வியாழன் கிழமைக்குள் பதிவாகும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

வாகனம் செலுத்துபவர்கள் மற்றும் பாதசாரிகளை மிகவும் கவனமான பயணிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# மிசிசாகாவில் ஒருவர் கத்திக் குத்தில் காயம்

ஒன்ராரியோ,ஏப்ரல்04

மிசிசாகா பகுதியில் ஏப்ரல் 3ஆம் திகதி இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில்ஒருவர்காயமடைந்துள்ளார்.

எக்லிங்டன் எவனியு வெஸ்ட் மற்றும் கிரடிட்வீவ் ரோட் இடையில் கைகலப்பின் போது இந்தக் கத்திக் குத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.




எனினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபருக்கு உயிருக்கு ஆபத்தான காயங்கள் எதுவும் இல்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் ஐந்தடி ஒன்பது அங்குல உயரமான சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

